**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC. 140/2020**

**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : யோகராணி | Caste | : |
| Father 's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**17.04.2024**

**முதல் விசாரணை**

நான் விருதுநகரில்குடியிருந்து வருகிறேன்.நான் விருதுநகரில் உள்ள தனியார் பள்ளியில் ஆசிரியராக பணி செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன மரகதவேல் என் கணவராவர்.கடந்த 17.09.2018 ம் தேதியன்று என் கணவர் நண்பர்களுடன் திலிப்பனுக்கு சொந்தமான TN 67 BF 5810 என்ற காரில் திலிபன் ஓட்டிக்கொண்டு மதுரை செல்வதாக சொன்னார். அவரது நண்பர்கள் பெயர் 1) திலிபன் 2) ஆரோக்கியராஜ் ஆகியோர் ஆவார்கள்.அதே நாள் மாலை 03.50 மணியளவில் நான் பள்ளியில் பணியில் இருந்த போது எனது கணவரின் நண்பர் கன்னிராஜ் எனக்கு போன் செய்து என் கணவருக்கு விபத்து ஏற்பட்டது என்றும் திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு கொண்டு செல்வதாக கூறினார். நான் என் உறவினர்களுடன் சேர்ந்து மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் வார்டு எண்.101 சிகிச்சையில் இருந்த என் கணவரை பார்த்தேன். அவர் சுயநினைவில் இல்லை. அவருக்கு பக்கவாட்டு தலையில் பலத்த இரத்த காயம் இருந்தது. அதே நாள் இரவு 10.50 மணியளவில் என் கணவர் இறந்து விட்டதாக மருத்துவர்கள் கூறினார்கள். திலிபன் காரை வேகமாக ஓட்டி வந்ததாகவும் என் கணவர் முன் சீட்டில் இருந்ததாகவும் விபத்தில் அடிப்பட்டு இறந்து விட்டதாக சொன்னார்கள். சம்பவம் குறித்து திருமங்கலம் காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். புகாரில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து தான். மேற்படி புகார் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி திலிபனை எனக்கு நன்றாக தெரியும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் கு.வி:**

சம்பவ விபரங்கள் அனைத்தும் எனக்கு கனிராஜன் சொல்லி தான் தெரியும். அந்த விபரம் எனக்கு நேரடியாக தெரியாது. புகாரை நான் மறுநாள் தான் கொடுத்தேன். நான் மருத்துவமனைக்கு போகும் போது சிவக்குமார் என்ற காவலர் அங்கிருந்தார். அப்போது என்னுடன் கனிராஜும் இருந்தார். சிவக்குமார் கனிராஜனிடம் விபரம் கேட்டார். கனிராஜ் விபரம் சொல்ல சொல்ல எழுதி கொண்டு என்னிடம் கையெழுத்து வாங்கி கொண்டார்கள். மறுநாள் காவல் நிலையம் வர சொல்லி காவல் நிலையத்தில் என்னை எழுதி தரச்சொல்லி நான் எழுதி புகாரை கையெப்பம் எழுதி கொடுத்தேன். அ.சா.ஆ.1 தான் நான் காவல் நிலையத்தில் கொடுத்தது. மதுரையில் மருத்துவமனையில் வைத்து நான் கொடுத்த புகார் அது இல்லை.